செய்தி குறிப்பு எண்.29 நாள்: 24.02.2010

## மத்திய இரயில்வே பட்ஜெட்டுக்கு
## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பாராட்டு

புதிய ரயில் பாதைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை வெறும் வணிகக் கண்ணோட்டத்தோடு மட்டுமே நோக்காது, ஒரு சமூகப் பார்வையோடு கருதவேண்டும் என்ற கொள்கைக் கோட்பாட்டை சென்ற ரயில்வே பட்ஜெட்டில் அறிவித்த மாண்புமிகு மத்திய ரயில்வே அமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்கள், வரும் நிதியாண்டிற்கான ரயில்வே பட்ஜெட்டிலும் இக்கோட்பாட்டை மீண்டும் வலியுறுத்தி உறுதிப்படுத்தி நாடு முழுவதும் புதிய ரயில்வே பாதைகளையும், ஏற்கெனவே இருக்கின்ற ரயில் பாதைகளுக்கு இரண்டாவது பாதை அமைக்கவும் அறிவித்து இருப்பதை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில், மதுரை – கோட்டயம், மதுரை – தூத்துக்குடி, திண்டுக்கல் – குமுளி, இராமேஸ்வரம் – தனுஷ்கோடி போன்ற புதிய ரயில் தடங்களை அறிவித்ததற்கு தமிழக அரசின் சார்பில் எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி–சாம்ராஜநகர் ரயில் பாதைக்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும் என்றும், நாகப்பட்டினம்–வேளாங்கண்ணி ரயில் பாதை 2009–2010 ஆம் ஆண்டிலேயே முடிக்கப்படும் என்றும், சேலம்–நாமக்கல் ரயில் பாதைப் பணிகள் 2010–2011 ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என்றும், கடலூர்–சீர்காழி, வேலூர்–விழுப்புரம், போத்தனூர்–கோவை ஆகிய ரயில் பாதை அகலப்படுத்தப்படும் பணிகள் 2009–2010 ஆண்டில் முடிக்கப்படும் என்றும், மயிலாடுதுறை–திருவாரூர், திண்டுக்கல்–பழனி ஆகிய ரயில் பாதை அகலப்படுத்தும் பணிகள் 2010–2011 ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என்றும், நீடாமங்கலம்–மன்னார்குடி ரயில் பாதைப் பணி மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

சென்னை துரித ரயில்பாதை திட்டத்தின்கீழ், வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை வரை விரிவுபடுத்தும் திட்டம் 2012 மார்ச் மாதத்திற்குள்

**முடிக்கப்படும் என்று அறிவித்திருப்பதும் மகிழ்ச்சியை அளிக்கிறது. திருவாரூர் ரயில் நிலையம் தரம் உயர்த்தப்படும் என்பதும், சேலம், திருச்சி கோட்டை மற்றும் திருத்தணி ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும் என்பதும் உவகை அளிக்கிறது.**

**சென்னை – சூலூர்ப்பேட்டை, சென்னை – வேளச்சேரி, சென்னை–திருத்தணி, சென்னை – அரக்கோணம் ஆகிய புறவழித் தடங்களில் கூடுதல் எண்ணிக்கையில் இரயில் சேவையை அதிகரித்து இருப்பது சென்னை புறநகர் பகுதிகளிலிருந்து சென்னைக்கு தினமும் வந்து பணிபுரிபவர்களுக்கு பயன் உள்ளதாக அமையும் என்று கருதுகிறேன்.**

**மேலும் தமிழகத்திலிருந்து பல்வேறு இடங்களுக்கு புதிய ரயில் சேவைகளை அறிவித்திருப்பது பாராட்டுதலுக்குரியது. சென்னையில் ரயில்வே துறை மூலம் ஒரு விளையாட்டுப் பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்றும், சென்னை பெரம்பூரிலுள்ள ரயில் பெட்டித் தயாரிப்புத் தொழிற்சாலை நவீனப்படுத்தப்பட்டு, மேலும் ஒரு அலகு நிறுவப்படும் என்று அறிவித்திருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது.**

**பயணிகள் கட்டணங்களையும், சரக்குக் கட்டணங்களையும் உயர்த்தாமல் இரயில்வே பட்ஜெட்டை அளித்துள்ள மத்திய இரயில்வே அமைச்சர் மாண்புமிகு செல்வி மம்தா பானர்ஜி அவர்களுக்கு எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

*** * ***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.